# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (17.04.2024 முதல் 21.04.2024)

**அறிக்கை எண் 031/2024** **தேதி.16.04.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 12.04.24 முதல் 15.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 37°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 24°C முதல் 27°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 25 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (12.04.2024 முதல் 15.04.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 21.04.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/04 | 13/04 | 14/04 | 15/04 | தேதி | நாள்-1 17/04 | நாள்-2 18/04 | நாள்-3 19/04 | நாள்-4 20/04 | நாள்-5 21/04 |
| 0.0 | 0.9 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 2 | 0 | 0 |
| 37 | 37 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 40 | 40 | 39 | 40 | 39 |
| 27 | 26 | 26 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 26 | 25 | 26 |
| 6 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 5 | 4 | 7 |
| 70 | 66 | 67 | 69 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 60 | 60 |
| 30 | 31 | 25 | 31 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 14 | 9 | 8 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 10 | 8 |
| 90 | 90 | 50 | 70 | காற்று வீசும் திசை | 200 | 270 | 200 | 230 | 180 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (17.04.2024 முதல் 21.04.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 19.04.2024-ம் தேதியில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 39°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்று மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **17-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **18-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **19-04-2024** | 1.0 | 2.0 | 0.0 | 12.0 | 0.0 | 0.0 | 3.0 | 0.0 | 0.0 | 3.0 | 0.0 | 8.0 | 14.0 | 6.0 |
| **20-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 3.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| **21-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 14 கி.மீ வேகமான காற்றுடன் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய கோடை மழை பெய்யக்கூடும்.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கரும்பு | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. ஏனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக்கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம். |
| மரவள்ளி | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளிகிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 5 – 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒருலிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |

| | | |
|---|---|---|
| வாழை | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ள து, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளதால் கால்நடைகளை மதியவேளைகளில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம். |

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**